# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.127/பேரூ/2023
நாள்: 21.7.2023

திருமதி ப. மகாலட்சுமி,
ஈரோடு மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
எலத்தூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். .... எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், எலத்தூர், மில்ரோடு, தெற்குபதி, க.எண்.76 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி ப. மகாலட்சுமி என்பவரது 11.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2023 அன்று பெறப்பட்டு, 127/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், எலத்தூர், மில்ரோடு, தெற்குபதி, க.எண்.76 திருமதி ப. மகாலட்சுமி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், எலத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட எலத்தூர் 'அ' கிராமம் மில்ரோடு க.எண் 76 என்ற வீட்டில் வசித்து வரும் நாங்கள் மற்றும் பொதுமக்கள் சௌகரியமாக சென்றுவர அரசூர் மெயின்ரோட்டிலிருந்து கிழ்மேல் சைட் எண்.71,72,73,74,75,76,77,78,79,80க்கும் தெற்கே 18 அடி அகலப்பாதையும் மற்றும் சைட் எண் 19,56,57,80க்கும் மேற்கே மில்ரோட்டிலிருந்து தென்வடல் 17 அடி அகலமுள்ள

பொதுப்பாதையும் உள்ளது. இது குறித்து நாங்கள் மனு எண் 4610385, தேதி 14.11.2022 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாளன்று மனு அளித்துள்ளோம். அதற்கு பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் இன்னும் 7 நாட்களில் குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்று அம்மனுவிற்கு பதில் அளித்துள்ளனர். ஆனால் இதுவரை எங்கள் தெருவில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இரண்டு வழியாக பொதுமக்கள் போகவர வழி இல்லாமல் மரம், செடி, தண்ணீர் தொட்டி, கழிவுநீர் பாதையில் செல்கிறது. பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. 18 அடி சாலையில் 6 அடிக்கும் குறைவான அளவே மக்கள் பயன்படுத்தும் வகையில் இருக்கிறது தயவு செய்து ஆக்கிரமிப்பை அகற்றி கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் சென்று கேட்டால் பொதுப்பிரச்சினையை சொந்தப்பிரச்சனையாக மாற்றி சண்டை போடுகிறார்கள். எங்களின் உரிமையை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். அதில் பேரூராட்சி குறிப்பிட்டுள்ள ராஜா நகரானது அனுமதியற்ற மனைப்பிரிவில் இருப்பதாகவும் அதில் 35 வீடுகள் உள்ளதாகவும் 3 வீடுகள் மட்டும் வரன்முறைப்படுத்தப்பட்டதாகவும் பேரூராட்சி தகவல் அளிக்கின்றனர். ஆனால் சில வீடுகள் வரன்முறைப்படுத்தப்பட்டு வரியும் செலுத்தி வருகின்றனர். அந்த சாலையும் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆக்கிரமிப்பை அகற்றிக் கொடுக்குமாறும் பேரூராட்சி அலுவலகத்திலும் தலைவர், வார்டு உறுப்பினர்களிடமும் பல முறை கூறியும் அதை சம்மந்தம் இல்லாத பல காரணங்களை கூறி திசைதிருப்புகிறார்கள். இது போன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் சாலையில்லா தெருவாக மாறிவிடும். ஆகவே ஆக்கிரமிப்பை அகற்றிக்கொடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என்றும் இதுவரை ராஜா நகருக்கு எந்த ஒரு அடிப்படை வசதியும் செய்துதரவில்லை. இந்த சாலையில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியும் தெருவிளக்குகள் அமைத்துத் தரும்படியும் எங்கள் சாலையில் தற்காலிகமாக மண் சாலை அமைத்துத் தரும்படியும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். சாலையின் குறுக்கே திறந்த நிலையில் இருக்கும் கழிவுநீர் கால்வாய்மேல் நடக்க அதை சரிசெய்து தரும்படியும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3) எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தமது 11.07.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

திருமதி.ப.மகாலட்சுமி, க/பெ. பச்சியண்ணன், ராஜாநகர் என்பவரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள ராஜாநகர் அனைத்து சாலைகளும் 18 அடி அகலம் கொண்டது. அதன் ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்களுக்கு தேவையான வடிகால் மற்றும் சாலை அமைத்துத் தரக்கோரிய மனுவிற்கு பேரூராட்சி அலுவலக 26.5.2023 நாளிட்ட கடிதத்தில் அனுமதியற்ற மனைப்பிரிவு என்பதால், இப்பகுதியில் 80 மனைகளில் 35 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் உள்ளது. இதில் வரன்முறை செய்யப்பட்டு (1) திரு. பச்சியண்ணன்

மனை எண்கள் 74,75,76,77 (2) திருமதி.கலைச்செல்வி– மனை எண் 43,44 மற்றும் (3) குணசேகரன் – மனை எண். 6 ஆகிய 3 நபர்களது 7 மனைகளை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வழிகாட்டுதலின்படி வரன்முறைப்படுத்தி, சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் மீதமுள்ள அனைத்து வீடுகளும் வரன்முறைப்படுத்தி வீட்டு வரி விதிப்பு செய்ய அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் 23.6.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையின்படி ராஜா நகர் பகுதிக்கு தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிக்கு அரசாணை வெளியிடப்பட்டு 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

தற்போது அரசின் திட்டப்பணியில் தார்சாலை அமைக்கவிருப்பதை தொடர்ந்து 5.7.2023 நாளிட்ட ஏலத்தூர் பேரூராட்சி அலுவலகம் மூலம் வருவாய் வட்டாட்சியருக்கு ராஜா நகர் முழுவதும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகளை அளந்து காட்ட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே சாலையின் அளவினை வருவாய் துறையின் மூலம் அளந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ராஜா நகர் பகுதிக்கு சாலை அமைத்து தரப்படும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4) இம்முறைமன்றத்தின் 21.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 11.07.2023 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 11.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"ஈரோடு மாவட்டம், எலத்தூர் பேரூராட்சி, அரசூர் மெயின் ரோடு தெற்கு பக்கத்தில் மேற்கண்ட முகவரியில் நாங்கள் வசித்து வருகிறோம். அங்கு 17 அடி அகலமுள்ள பொதுப்பாதை உள்ளது. மேற்கண்ட பாதையில் சுமார் 10 அடி அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தில் போக வர வழி இல்லாமல் மரம் செடி கொடிகள் புதருடன் காணப்படுகிறது. மேலும் கழிவு நீரும் அங்கு சூழ்ந்துள்ளது. அங்கு அவசர காலத்தில் ஆம்புலன்ஸ் போன்ற வாகனங்கள் வந்துசெல்ல வழியில்லாமல் உள்ளது. எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றிட எலத்தூர் செயல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் எங்கள் பகுதியில் தெருவிளக்கு வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளும் பேரூராட்சியால் செய்துதரப்படவில்லை. எனவே எங்கள் பகுதியில் உள்ள சாலை ஆக்கிரமிப்பை அகற்றிடவும், மேலும் எங்கள் பகுதியில் சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகளை பேரூராட்சியால் செய்து தர ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்."

6) எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் 11.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

பவானிசாகர் பேரூராட்சி செயல் அலுவலரான நான் எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) கடந்த 15 தினங்களாகப் பணியாற்றி வருகிறேன். மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் ஆய்வு செய்யப்பட்டது. அங்குள்ள ராஜா நகரில் 18 அடி அகலம் கொண்ட சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தார் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு ரூபாய் 84 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் 21.7.2023ல் கோரப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது. எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள புதர்களை அகற்றி, தார் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு, இன்னும் இரண்டு மாத காலத்தில் முடிக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட பகுதியில் தெரு விளக்குகள் இன்னும் ஓரிரு நாட்களில் பொருத்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது மனுவில் ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், எலத்தூர், கதவு எண் 76, மில் ரோடு தெற்குபதி என்ற முகவரியில் குடியிருந்துவரும் "ராஜாநகர்" பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, சாலை வசதியும், அடிப்படை வசதியும் செய்து தருமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதி, அனுமதியற்ற மனைப்பகுதி, இப்பகுதியிலுள்ள 80 மனைகளில் 35 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அதில் 7 மனைகள் மட்டுமே வரன்முறைப்படுத்தப்பட்டு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதென்றும், மீதமுள்ள அனைத்து வீடுகளுக்கும் வரன்முறைப்படுத்தி வீட்டுவரி விதிப்பு செய்ய அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டு, தற்போது அரசாணை மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் 23.6.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையின்படி ராஜாநகர் பகுதிக்கு தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, 21.07.2023 அன்று எலத்தூர் பேரூராட்சி வார்டு எண். 14, ராஜா நகர் மெயின் வீதி 1,2,3 மற்றும் ராஜா நகர் குறுக்கு வீதி 1,2 சாலைகளை ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதையும் மேலும் சாலையின் அளவினை வருவாய்த்துறை மூலம் அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி ராஜாநகர் பகுதிக்கு சாலை அமைத்துத்தர அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்பதும் எலத்தூர் செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

எலத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரரின் குடியிருப்பு அமைந்துள்ள பகுதிகளில் இரவு நேரத்தில் பொதுமக்கள்

சிரமமின்றியும் மற்றும் எவ்வித அச்சமின்றி பொதுபாதையில் சென்று வரும் வகையில் அத்தியாவசிய தேவையான தெருவிளக்குகளை ஓரிரு நாட்களுக்குள் பொருத்திட உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மேலும் பொதுப்பாதையிலுள்ள செடி, கொடி, புதர் போன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றி வாகனங்கள் உரிய நேரத்தில் வந்து செல்வதற்கு வசதியாக தார்சாலைகள் மற்றும் அங்குள்ள மக்களின் கோரிக்கையான வடிகால் வசதியினை 2 மாத காலத்திற்குள் அமைப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜுலை 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி ப. மகாலட்சுமி,
76, மில்ரோடு,தெற்குபதி,
நம்பியூர் வட்டம்,ஈரோடு மாவட்டம்–636458

2)செயல் அலுவலர்,
எலத்தூர்பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்

3)பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4)இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.